# DEPOSITION OF WITNESS
# In the Court of Judicial Magistrate No.I, Mettur
# Case No : M.C.No.19/2022

Prosecution witness : **ம.சா.1** **Date : 16.06.2023**

| | |
|---|---|
| **Name : செல்வலஷ்மி** | Caste : வன்னியர் |
| **Husband's Name : தேவராஜன்** | Calling : - |
| Village : கருங்கல்லூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 40 |

(Petitioner and Respondent present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) எதிர்மனுதாரர் மாதம் ஒரு லட்ச ரூபாய் சம்பாதிக்கிறார் என்பதற்கு ஆதாரமாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருங்கல்லூரில் எங்களுக்கு சொந்தமான வீடு தோட்டம் உள்ளது என்றால் சரிதான். தற்போது எதிர்மனுதாரர் தனது சொந்த ஊரான கருங்கல்லூரில் உள்ள அவரது சொந்த வீட்டில் அவரது பெற்றோர்களுடன்தான் வசித்து வருகிறார் என்றும் தற்போது எதிர்மனுதாரருடன் அவரது சொந்த வீட்டில் வந்து ஒன்றாக குடும்பம் நடத்த தயாரா உள்ளார் என்றால் மேற்படி அந்த இடத்தை தவிர வேறு எங்கு வேண்டுமானாலும் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்த தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த ஜீவனாம்ச மனுவில் நான்மட்டும் தான் மனுதாரர் என்றால் சரிதான். மனுவில் எனக்கு மட்டும் தான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் குழந்தைகளுக்கும் சேர்த்துதான் கேட்டுள்ளேன். நான் எனது பெயரில் வைத்துள்ள KR WET கிரைண்டர் கடைக்கு GST, INCOME TAX செலுத்துகிறேனா என்றால் என் பெயரில் செலுத்துகிறேன். மேற்படி GST, INCOME TAX செலுத்தியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் தனியாக ஆடிட்டர் வைத்து மேற்படி GST, INCOME TAX செலுத்துகிறேன் என்றால் சரிதான். நான் கோரும் பரிகாரம் கொடுப்பதற்கு எதிர்மனுதாரரிடம் எந்த வசதியும் இல்லை என்றும் அவர் கால்

உடைந்து நடக்க முடியாமலும் எந்த வேலைக்கு செல்லமுடியாத நிலையில் உள்ளார் என்றும் அவரது பெற்றோர்கள்தான் அவரையே பராமரித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் பெற்றுதான் வாழ்க்கை நடத்தவேண்டிய அவசியமில்லை என்றும் நான் நல்ல வசதியாகதான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வருமானவரி செலுத்துபவர் என்றால் சரிதான். நான் எவ்வளவு வருமானவரி செலுத்துகிறேன் என்று இந்த மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு எந்த வருமானமும் இல்லை என்றும் நான் கேட்கும் பரிகாரம் கொடுக்கும் அளவிற்கு எதிர்மனுதாரருக்கு வசதியும் இல்லாததால் இந்த மனு முழுமையாக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**